83

உ

ஸ்ரீ பண்ணையம்பதி நாவலசம்

ஸ்ரீலஸ்ரீ

ஸ்ரீ கன்யநாதஸ்வாமிகளெனும்

# மாமவுனதேசிகர் மகத்துவம்.

இஃது

பெரியகுளம்,

கு. க. வே. கற்பூரதிருவேங்கடஸ்வாமியால்

இயற்றியதை

பழநி ச. சீரங்கசெட்டியார் கோ. பெ. மாரப்பசெட்டியார்

அவர்களால்

---

பழநி.

B. பட்டாபி செட்டியார் அவர்களது

...கிருஷ்ண விலாசம் அச்சுக்கூடத்திற்

...ப்பிக்கப்பட்டது.

—(.)—　　　1924]

3 - OCT 19

Q2:38·211 PP

N24.

181975

உ

ஸ்ரீ பண்ணையப்பதி நாவலசம்

ஸ்ரீலஸ்ரீ

ஸ்ரீ கன்யநாதஸ்வாமிகளெனும்

# மாமவுனதேசிகர்

## மகத்துவம்.

இஃது

பெரியகுளம்,

கு. க. வே. கற்பூரதிருவேங்கடஸ்வாமியால்

இயற்றியதை

பழநி, ச. சீரங்கசெட்டியார் கோ. ரே. மாரப்பசெட்டியார்

அவர்களால்,

---

பழநி

B. பட்டாபிசெட்டியார் அவர்களது

ஸ்ரீ ராதாகிருஷ்ண விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

ரக்தாக்ஷி-ஸ்ரீ வைகாசி-மீ] [1924

ஸ்ரீ கன்யநாதர் கழலிணைகாப்பு

# மாமவன தேசிகர் மருத்துவச் சரித்திரச் சுருக்கம்.

திருவுலவிவளமிகுத்த பன்னகங்களில்ச்சிலாக்கியமுள்ளதும், பாண்டிய நாட்டிற்கோர் சிகரம்போன்றதுமான பண்ணையங்கிரி என்றொரு கிராமம் அஃது மூங்கில் நிறைந்துள்ள காரணம்பற்றி பண்ணைக்காடு என்றுபெயர். அதில் முதலில் மன்னாடிமார்கள் குடியேறியிருந்தனர் பின்னர் பிரிதீசவம்சதேசாதிபதிகள் என்ற 24 மனையார் காஞ்சி காமாக்ஷியம்மன் கருணையால், மும்முடிபூண்டரசாண்டு அரசாக்ஷி தாழ்ந்த காலத்தில் உமையி னுத்திரவினால் மூலஸ்தானமான அம்மன் பூசைப் பேழைப்பெட்டகத்தைக் கைக்கொண்டு இப் பண்ணையம்பதி புக்கினர். அதில் மூங்கில்ப்பண்ணையில் வீடுகட்டி உமையின் பேழைப்பெட்டகத்தைவைத்து வணங்கியும், தாங்களும் தங்கட்கு அப்பண்ணையிலே வீடுண்டாக்கி தினைப்புனம்முதலிய பயிர்செய்து பின் கொஞ்சங் கொஞ்சமாய்க் காபி, வாழை, யேலம், கொய்யா, நாரத்தை முதலிய கனிவர்க்கங்களை விர்த்திக்குக்கொணர்ந்து மாடமாளிகை கூட கோபுரமுதலிய உன்னித மாளிகைகளுங், காபி, வாழை, யேலம், கொய்யாமுதலியதுகளை தோப்புப்போலவளர்ந்துள்ளதும் அதனால் தேவநாட்டிற்கிணைசொலற்கொண்ணாத சிறப்புடனும்விர்த்தியாகினர். அப்பதியைச்சூழ்ந்து ஐந்து பதிகளுள்ளன. அவைகாரணப்பெயரால் ஆலடிபட்டியென்றும், ஊரல்பட்டியென்றும், பேரப்பட்டியென்றும், பழதடி[illegible]என்றும், ஓகமியர் வள்வு என்றும் ஐந்[illegible] பதியில்மன[illegible]ருக்கும், ஆலடிபட்டி ஊரல்பட்டியென்றதில் தேசாதிபதிமார்களிருந்துள்ளார். தேசாதிபதிகளின்

181975

வாசஸ்தலமே தற்காலம் நாகரீகத்திற்சிறந்த மதுரை பட்டணம் முதலியயிடங்களிலுங்காணற்கில்லா விசித்ரமாளிகைகள் ஆபரண வஸ்திரங்கள் நாகரீகங்கள் மிகுந்து சிறந்துள்ளன. அல்லாமலும் இபபதியை பண்ணையம்பதி. பண்ணமாநகரம், பண்ணக்காடு, தேசாதிபதிகள் பட்டணம், ஸ்ரீராமபட்டணமென்றும் சொல்லுவர். ஸ்ரீராமர் முற்காலத்தில் காளியன் காட்டில் புனக்காடு விதைத்த காளையப்ப மன்னாடியென்பவன் பெரும்பூசனிவிதைநட அப்பரங்கி படர்ந்து தளிர்த்து காய்ப்பில்லாமலிருந்ததுபோற் குளிர்ந்து, ஒருவர் விழிக்கும் புலப்படாது ஒரு கூஸ்பாண்டக்காய் மட்டுமிருந்தன. அஃதில், திருநாமம் ஜொலித்தன. அதை ஐந்தலை நாகங்காத்துக்கொண்டிருந்தன. அஃதால் காரணந்தோணுத காளையப்பன் (கரியமாலென்ற) தனது குலதேவதையை வேண்ட அத்தெய்வம் சொற்பனஞ்சாதித்து இப்பரங்கியில் திருநாமந் தெரிவதால் இஃது ஸ்ரீராமபிரான் பிரதிபிம்பமானது அதைச் சர்வாடம்பரத்துடன் இன்ன தினத்தில் ஊரல்பட்டியின் ஓரத்தில், கோவில் கட்டிக் கொண்டாடுங்கள். அதற்கு ஸ்ரீராமர் என்றுபெயர் என்றும் உத்திரவாகியதால் அதுமுதல் ஸ்ரீராமர் உச்சவம் வைகாசி-மீ த்தில் நடத்திவருகிறார்கள் அதற்குமித் தேசாதிபதிகளும் மன்னாடியார்களும் முக்யஸ்தர். அதல்லாமல் ஸ்ரீராம நவமியன்று பட்டோர்ச்சவாதிகளும் நடந்து சிறந்துள்ளனவக்காரணத்தால் ஸ்ரீராமநகரமென்றும் பெயர்வாய்த்தன. இத்தேசாதிபதிகள் கொணர்ந்த ஸ்ரீ காமாக்ஷியம்மன் பேழை பெட்டகம் மூங்கில் பண்ணை வீட்டிலிருந்தபடியே மூங்கிலணை காமாக்ஷியம்மனென்று பெயர்பெற்றும் நாரபபங்கியின் தண்ணீர்க்காக சண்முகநாதனுடன் வரதாடிய பெற்று

மூங்கமூலிய காரணத்தினால் தென்பாகம் மஞ்சணதியென்று பெயர் பெற்ற நதிவழியே சிங்காரத்தோப்பில் வீற்றிருந்து முருகாசலத்தி னடிவாரத்தி லரசாக்ஷிபுரிந்த பூசாரிநாயக்கரிடம் மதியமைச்சனாயிருந்த தனது மக்களிற்சிறந்த ஒருவனிடஞ் சொர்ப்பனஞ் சாதித்து அவன்மூலமப்பூசாரிநாய்க்கருக்குத்தெரிவித்து மஞ்சலாற்றைப் பெருங்கெடுக்கச்செய்து அதில் பூமாலை சந்தனங்கஸ்தூரி மணங்கமழவந்து அப்பூசாரி மன்னன்பூமியிலொதுங்க அத்தயிடத்தில் கூரைக்குச்சுக்கட்டி அக்குச்சுக்குள் அப்பேழையை நாளது வரை புதுப்பிக்கப் படாமலும். தொடப்படாமலும் யாதாமொருவர் கண்படப்படாமலும் தாளிட்டுப்பூட்டிட்டுச் சுற்றிலுங் கோட்டை கட்டி அக்கோட்டை வெளிக்கதவிற்கே பூசை நடந்தேறியும் சிவராத்திரியில் காவடி, நெய்கப்பம், பசுக்கன்று, திருமுடி: திருநாமப் முதலியபெருந்திருவிழாவும், நடந்துவருகின்றன அக்காமாக்ஷியம்மன் ஆலயந்திறந்து தேசாதுபதிமக்கள் பூசிக்குங்காலமடுத்துள்ளன. அதன் விபரம் பின் பெரிய பதிப்பில் தெரிவிக்கின்றனம். மன்னாடியார்களாலக் கொணர்ந்த கரியமால் பேழைப் பெட்டகம் தாண்டிக்குடி மன்னாடியபாச்சிகளின் பட்டணத்திலகோவில்கட்டி ;ஸ்ரீ காமாக்ஷியம்மன் கோவில் பேழைபோல தாளிட்டு ஆதனிக்க முடியாமலிருக்கின்றது. இன்னம் இப்பண்ணையம்பதியிலுள்ளகிரிவளர்ந் தெய்வவளம்பக்தவளமுதலியதைத் துலக்கி யடுத்த பதிப்பிற் கூறுவாம். இப்பண்ணையம்பதியில் ஆலடிபட்டியில் துந்துபி ௵ தை-மீ தத்தில் கொண்டல்செட்டியார குழந்தை 8 வயதுள்ள குழந்தை தன் வீட்டிற்கு பின்புரத்திலுள்ள நாப்பித்தோட்டத்திற்குப்போயிருந்ததாயைத்தேடிச்சென்று அதின்வழியாக ஆள் சத்தங்

கேட்டு 1 மைல் தூரஞ்சென்றன. இருட்டு மூடியதால்க் குழவி யிரண்டு காளியம்மன் கோவிலில் புகுந்திருந்தன. குழந்தையைப்பெற்றோர் தேடிக்காணாததால் பிரலாபித்துக்கொண்டிருந்தார். அந்த ராத்திரி முழுதும் அந்தக்குழந்தைக்கித் தாய் போலன்னம் பால் முதலியதுதவி காப்பாற்றிவைத்துக் காலை விடிந்தவுடன் தன்னில்லம் சேரும்படி செய்தன. இவ்வித தெய்வமகத்துவந்தங்கிய பண்ணையம்பதிக்கு மால்கூறலாம்.

## பண்ணையம்பதிக்கு நான்குமால்.

ஸ்ரீ பழநியம்பதிக்கும் ஸ்ரீ பாலதெண்டாயுதபாணியமர்துள சிவகிரிக்குந் தெற்கிலும், ஆங்கிலமன்னர்க்கும் பீடபூமியாகிய கொடைக்கானல் தாலூக்காவிற்குக் கிழக்கிலும், முற்கூறிய அம்மன் ஆலயமுற்ற தேவதானத்திற்குவடக்கிலும், தாண்டிக்குடியென்ற மன்னாடியப்பகுதிபாங் பட்டணத்திற்கு மேற்கிலுமிருக்கிறது. இந்நான்குமாற்குள் அநேகம் பிரிவுகளிலங்குகின்றன. குடைக்கானல் ரோட்டு என்று அம்மயநாயக்கனூரிலிருந்து கங்குவார்பட்டிக்கு வந்து அது முதல் 5 மயிலுக்கு மேல் 20 மயில் வரை ஷை காட்ரோட்டினிருபக்கத்திலும் காபி, வாழை, ஏலம், கொய்யா முதலிய மகசூல் கனிவர்க்கங்களுடன் நிறைந்து ஷை பண்ணையம்பதிக்கு ஒரு அணியாக இருக்கிறது. ஷை காட்ரோட்டு 9-வது மயில் 12-வது மயிலிலிருந்து ஷை பண்ணையம்பதிக்கு 1 நாழிகையளவில்போகலாம். இப்பண்ணையம்பதியின் வளத்தினைப்பகருங்கால் பொன்னகரமென்றே புகலல் வேண்டும்.

## சாமிகள் உற்பவம்.

செடி பண்ணையம்பதியில் ஊரல்பட்டியில், தேசாதிபதிகள் மரபில்; லெக்கையர் கோத்திரத்தில் கருப்பஞ்செட்டியாரின்சென்மாந்திர தபோமகிமையால், ஸ்ரீராமர் கருணையால், ஸ்ரீகாமாக்ஷிபம்மன் வரப்பிரசாதத்தினால் அவருடைய பத்தினி காமுலம்மாளுடைய கெற்பத்தில் தேசாதிபதியார்களின் குலகுருநாதன் கலைக்கோட்டாரினம்சமென்றுரைக்கும் வண்ணம் சிரேஷ்டந்தங்கிய ஜேஷ்ட புத்திரனாக அவதரித்தனர். 5 வயதிற்குள் புலாலை மறுத்தனர். தேவதா ஆதரவடைந்தனர். 12 வயதளவில் கல்விச்சாலையிலும் சிறாரோடுதிரிந்தாடுவதிலும் போதுபோயின. 20 வயதளவில் சில ஞானநூலும், தோட்டம் மராமத்துப்பார்வையுஞ் செய்துவந்தனர். 20வயது வந்தநாள் தந்தை தாயாரால் விவாகத்திற்கெத்தனிக்க அதுசமயம் மணத்தில் மனதிசையாது வெறுத்துத்தாதையுடன்வாதாடித் தன் தாயத்தைவிற்றுத் தச்சன்காட்டில்த் தனித்து வைகி ஸ்ரீ கண்ணன் கருணையால் சித்தன் தெரிசனம்பெற்று, அன்னவர்பால் அருங்கானகத்துய்யும் மகிமைவாய்ந்த கன்யநாதரிடத்தில் சாவமார்க்கமுங்கற்று, மாய்கையைவாட்டி, வெளியினைக்காட்டி, ஒளியினைநாட்டித் தெளிவினையூட்டி, தவநிலையுற்று, மாமௌனயோகம்பெற்றலவுநாள் தாய் தந்தை சுற்றத்தாருடன் தச்சன்காட்டில் வைகிய தனையனைக்காணாது பன்னும்டாடித்தேடிப் பகவத்தருளால் பரிபூரணானந்தமௌனநிலையுற்றிலகும் மாதவக் குமாரனைக்கண்டு மதிமருண்டித் தவக்குமரன் நம் நற்றவக்குமரன் என்றெண்ணி சுயநகரத்திற்கழைத்துவந்தபின்னர் முற்கூறிய ஐந்து நகரத்தவர்களும் பால் பழம் கிழங்கு காயி முதலியவை உதவியும் இவரது

தபாக்கினி தணிந்திலை. இவரது தகைமை தெரிந்து உதவத் தக்கவரின்மையால் சன்னஞ்சன்னமாக சமரச நந்நிலையுற்றனர் அதன்பின்னர் அன்னபானாதி துறந்து மௌனநிலையோடிருக்கும் மாதவன் மகிமை அறிவான் சூழ்ந்த பக்தர்களாய பந்தினரும் மற்றையரும் தெரிவான் எண்ணிச் சிறுவிரலளவுக்குப் பாதியுள்ள நூற்சரட்டின்மிசை யோக நிட்டை புரிந்தனர். இஃது (சூரி சுப்பையன்) வீட்டில் நடந்தன. பின்னர் ஒரு மாதம் நிஷ்டையோகத்தில் இருப்பதாய் காலத்தின் அளவு கூறி (தொ. கா. ராமசாமி) வீட்டில் தாளிட்டு வைகியபின் தாளிட்ட கதவங்களுக்கு இவரைச் சோதிப்பானெண்ணி பூட்டிட்டனர் சொன்னகால அளவான தேதியன்று அம்மனையின் முற்றத்தில் இவரது வருகையை உத்தேசித்து நின்றவர் மனையை நோக்கிநிற்ப இவர் அப்பதி மருங்கிலுலாவி மனைநோக்கி நிற்கும் மக்கள்முன் தோன்றினர். பின்னர் நினைப்போர்முன் வந்துமுசாவினர். ராமேஸ்வரத்துக்குத்தன்னைக்கேட்டுச்சென்றவொருவனுக்குப் பண்ணையம்பதியில்தன்னை வினவிநின்ற பலருக்கும் ஏககாலத்தில் தெரிசனம் தந்தார். பழநித் தாலூகா தாமரைக்குளம் கிராமம் வெ. ராமசாமி பிள்ளையவர்களுக்கு இடைவழியில் தெரிசனம் தந்தார் முற்கூறிய கரியமாலாலயத்தின் கதவைத் திறந்து தனக்குப் பரிசாகக் கிடைத்துள்ள தேவாங்கங்களை மூடைகட்டி அப்பறையுடன்சேர்த்தி கதவைப்பூட்டிட்டு இதன் காக்ஷி பின்னாலென்றுரைத்தனர். நாவல் அஜம்பென்ற புண்ணியக்ஷேத்திரத்தில் (கொ. ரா. காமைப்பனால்) ஸ்வாமிகள் வைகப் பன்னகசாலையும், பிள்ளையார் கோவிலும் கட்டி சில பூமி மானிபமாய் விடப்பட்டன. பின்னர் இவரது மகுத்துவத்தால் அப் புண்ணிய

க்ஷேத்திரத்தில் சிஷ்யகோடிகளால் நூற்றுக்கணக்கான பசுக் கன்றுகள் விடப்பட்டன. அக்கினிச்சட்டி, காவடி, பாற் குடம், திருமுடிகழித்தல், நாமதேயம் வைத்தல், விசாகத் திங்களில் ரதோற்சவம் முதலிய வைபவங்களும் நடந்துள் ளன. இதற்கு மானேஜர் ஐந்துபேர் ஏர்ப்பட்டனர். பின் சாமிகள் தெற்கிலுள்ள சுருளிஸ்தலம் புக்கி சாதக் களைப்பழகி திரும்பினர். முற்கூறிய நாவலசத்தில் தற்சிலை உருவமும் கோவிலும், ஏற்படுத்த எண்ணி மானேஜர்களைக் கலந்து கல்மட்டம்வரை கட்ட ஒத்திருந்த மானேஜர்கள் விலகிவிட்டனர். தெய்வபலத்தால் கோவிலுங்கட்டி தற்சிலை உருவமுமமைத்து வளந்தங்கிய காபி, வாழை நிலங்களும், அதின் பலன்களும், சித்தின் மகத்துவங்களும் ஏற்படுத்தினர். பழநிஸ்தலத்தில் சித்துவாய்ந்த ஸ்ரீமான்காலஞ்சென்றசல்லிச் சாமிகள் சமாதியாலயத்தை சம்பூரணப்படுத்தியும் உள்ளார். இவர் 20 பிராயமுதல் 32 வயதுக்குள் நடத்திய சித்துள் சிறிது கூறினேம். மற்றவை அடுத்த பதிப்பில் கூறுவாம். ஸ்வாமிகள் நிஷ்டை புரியுமிடத்தில் யாதொரு பின்னமும் ஏற்படாதிருக்கும்பொருட்டு இவருக்கு வேண்டும்போது கவர்மெண்டாரால் எந்த தாலூகாவிலும் கான்ஸ்டேபிள்கள் கொடுக்கவேணுமென்று கலெக்டரவர்களால் உத்திரவு கிடைக கப்பட்டுள்ளன.

இங்ஙனம் தங்களன்புள்ள

கு. க. வே. கற்பூர திருவேங்கடஸ்வாமி.

உ

ஸ்ரீகன்யநாதர் கழலிணைகாப்பு.

ஸ்ரீலஸ்ரீ.

பண்ணைமாநகர் நாவலரசு,

# மாமவுனதேசிகர் மகத்துவம்.

வெண்பா.

சீலமிகும் பண்ணை சிறக்குகின்ற நாவலசு
கோல மிகு தலத்திற் கோவுலகர்—மேலான
மாமவுன தேசிகரின் மாமலர்த்தாட் பேணுகின்ற
தாமகிமை கூறவிது வாம்.

## விஞ்ஞாபனம்.

சர்வ சீவ தயாபரனாகிய சாக்ஷாத் ஸ்ரீ பரபிர்மத்தின் திருவருளை முன்னிட்டு ஆயிரஞ் சதுர் யுகங்களை யோர் பகலாகக்கொண்ட நான்முகனது படைப்பிலுண்டான எண்பத்திநான்கு லக்ஷஞ்சீவகோடிகளிலும் ஆறறிவையுடைய இருபத்தியோரிலக்ஷக் கணக்கான மானிஸ்யர்களாகிய நாம் சரிகை, கிரிகை, யோகம், ஞானமென்ற நான்கு கிரிகையினால் இரண்டு பாகம் லௌகீகமென்று மிரண்டு பாகம் வைதீகமென்றும் பிரிக்கலானதில் அது இது என்று இரண்டற்ற இடத்தி

விலங்குபவனே யீஸ்பர சக்தியை யடைந்த மகான்களென் றும் இதிற் சர்வ வல்லமை தங்கிய சற்குருவருளினுல் மவுன ஞானம் மேலானதென்றும், அதே சிலாக்யமுற்றதென்றும், அம் மவுனத்தின் மகத்துவத்தைச்சப்தரிஷிகளில் முதன்மை வாய்ந்த ஸ்ரீ வதிஷ்ட பகவான் ஸ்ரீமந்நாராயணரது பிரதிபிம் பமாகிய ஸ்ரீராமருக்கு ஞானம் போதித்த காரண நூலாகிய அமல ராமாயணமென்ற ஞானவாசிட்டத்தில் கூறியிருக்கிற வேதாளக் கதையில் மிக்க விளக்கமாகச் சொல்லியிருக்கிறுர். ஆகலால் நன்னூ லுணர்ச்சியுடைய நாவலர்களும், நற்றவ சிலாக்ய வேதாந்த பாராயணரும் நன்குணரும்வண்ணம் மகா மாயா வல்லமை மிகுத்த இந்த கலியுகத்தில் (நூதன விவேகி யுள்ளம் நுழையாது நுழையுமாகிற் பூத ஜென்மங்கள்கோடி புனிதனும் புருடனுமே) என்று நவநீதமென்ற கைவல்யத்தி லுங் கழறியிருக்கின்றுர். அக் காரணங்க ளெல்லாமலு மநேக காரணங்களும் வேத போதகாசிரியர்களாகிய நம்முன்னுேர்கள் தொன்முறையாற்றெருகுத்துமிருக்கிறுர்கள். யானும் என்னு டைய அனுபவத்தி லிந்நூலுக்குக் காரண பூதமாய் விளங்கா நின்ற மாமவுன தேசிகரது மகத்துவத்தை எளிய நடையா லியற்றியுளேன். கற்றறிந்த மேலோர் குற்றமிருக்கினுங் கொண்டணைக்க வேண்டும்.

தங்களன்புள்ள

கு. க. வே. கற்பூர கிருவேங்கிடஸ்வாமி.

மூலப்பொருளாய் முதலாய் முனிவரர்கள்
சால வணங்குந் தவமணியாய்க்—கோலமிகும்
வித்தக ஞான மிகுமவுன தேசிகரின்
சித்தைக் கணபதிநீ செப்பு.

அத்தி யழைக்கவந்த வாதிமூ லப்பரமன்
சித்திரப்பொற் றாமரையைச் சிந்தித்துச்—சித்தரெனும்
மாமவுன தேசிகரின் மாட்சியினை யோதிடற்கு
மாமுகனே நீயருள்செய் வா.

தேசாதி பர்குலத்துச் சீலமிகு வேங்கடன்சேய்
பூசா பலத்தாற் புவனமிசை—பேசுரிஷி
யார்புகழை யோதுவதா லாதிமறை கற்றபெரி
யோர்கள் பதம்பணிகு வோம்.

---

ஸ்ரீ நாவலரசு.

## மாமவுன தேசிகர் மகத்துவம்.

### நூல்.

பொன்னார் கலையுணர்ந்து போதிக்கும் மெஞ்ஞானக்
கன்னிய நாதற் கருணையால்—மன்னுதவ
மாமவுன தேசிகரின் மாகதையை வண்டமிழால்
நாமறைவோம் நாதனருள் நாட்டி

( சி ந் து. )

விஞ்சையுணர் ரஞ்சிதக்கண்ணே செஞ்சொலுணர்
வஞ்சியே மவுன குரு மகத்துவங்கேள்
சிலமிகும் பண்ணைநகரில் தெலுங்கு
தேசாதிபர் வளத்தைச் சொன்னதறிவாய்
வீரமுங் கருணை விலகார் வேதமுறை
சாரமுமுணர்ந்து முறை தாண்டி நடவார்
ஞானமுமிகுந்த குலத்தார் நாலாறு
ராஜர்களெனும் பெயரை நாட்டிப் பெலத்தார் (தங்)
இத்தகை மிகுத்த குலத்தில் முத்தர்புகழ்
வுத்தமி வுமையவளினுயர் வரத்தில்
பக்குவமிகுத்த நலத்தார் தக்கபுகழ்
லக்கையரெனப்புகழும் நலவளத்தார்
கோத்திரப் பெயர்கள் மிகுத்தார் கோலமுள்ள
கோபமும் வெகுளியதுங் கூடுமகத்தார்
ஆணவமிகுத்த குலத்தார் சற்று
மடங்காப் புலிக்குநிக ரானமனத்தார்
காமமே மிகுந்த குணத்தார் சிறு
காரணங் கண்டாலுமதைக் காணுமனத்தார் (தங்)
விருப்பமே மிகுத்த விரதன் மிக்கதுய்ய
கருப்பணவேளெனுங் கனதவத்தான்
காமுலம்மாளெனவே கவினுறாங்
கற்புறு மடவரலைக் கலந்துயர்ந்த
கருணைவிளக்கமதாற் பண்ணைக்
காட்டினுளோரெலாம் நாட்டமுடன்

செய்ததவப் பலத்தால் ஸ்ரீராமர்
திவ்யகருணையது திகழும்வண்ணம்
தேசாதிபர்குலமே காமாக்ஷி
தேவியினருள்வள மிகுத்ததென்றே
செப்பிடும்புவியனைத்துஞ் சீராக
ஒப்பிடும் பெருமைநல மோங்குவண்ணம்
மாலார் காமுலம்மை வயற்றுயர்
சூலான துமுயர் சுடரொளியாய்
வானவர் பூ மழைபொழிய ஞானதவ
மோனமுறு சீலருள மூலமுமுய்ய
பெற்ரு ரொரு மகவை யிந்த
பிருதிவனைத்தினுக்கு மொரு மணிபோல்
பண்ணையம் பதி சிறக்க நாலாறு
பார்த்திபர் குலமது பரிந்துவக்க
நண்டு சிப்பி வேய் கதலி மண்டலத்தில்
ரத்தினத்தினைக் கொடுக்கும் நன்மையெனவே
மாதா பிதா மகிழப் பண்ணை
மாநகர் வதியினத்தார் மிகத்திகழ
தேவாதி பிண்டமென்னத் திகழ்ந்திடுஞ்
சீலமிகு மூர்த்திகளி னம்சமென
வந்துயர் புவியின்மிசை சுந்தரமார்
மஞ்சனுமுதித்திட (வஞ்சான வயதில்

## சிறுபோதில் நடந்தவை கூறல்,

அறியாச் சிறுவயதி லாகமத்தி
லறைந்த முறைப்படியே யனுதினமுந்

தன்னுற் றனையுணர்ந்த தவமிகு
தனையன் சுதாவிற் பிலாற் றனைவெறுத்தார்
உண்ணுர் பிலாலையிவர் அதைக்கண்டா
லோங்கரித் தழுதெடுத்தே யெறிந்திடுவார்
அஞ்சரம் வயதுடையோர் ராவி
லஞ்சாதெழுந்து மலர் கொய்திடுவார்
மூலையார் தனிற் குளிப்பார் மூல
முதல்வி முச்சூலிக் கபி ஷேகம்புரிவார்
பிச்சிமலர் மாலை தொடுப்பார் மிக்க
பேரின்பப் பனுவலைப் பாடிமகிழ்வார்
சின்னளிவ்விதமா யிவருஞ்
செய்துவருஞ் சீரதனைத் தெரிந்தவர்கள்
பெற்றோரிடத் துறைக்க வந்த
பெரிய முறையதனை யறியாமல்
ஏதோ இவன் சிறுவ னில்லில்
எப்படி யெழுந்து நதி முழுகுவதோ
அஞ்சாத் தனிவழியி லிவனு
மடக்கமுடனடக்க வறியானே
என்றே மனங்கலங்கி யீன்றவர்க
ளினத்திலுள்ளோர்க் கிதை யியம்பியிந்த
பாலன் நடுராவில்ச் சென்று
பாவையுமை காளியர்க்குப் பூசைபுரியும்
காரியத்தைக் காணவேணு மென்றதிகக்
கவனமுடனுரைத்துக் கவலையுடன்

பார்த்துவருங் காலமதனில் பாலனிவர்
படுக்கையெழுந்து நதி முழுகுவதும்
பிச்சிமலர் கொய்து விறைவில் இச்சையுடன்
பேச்சியுமை காளியர்க்குப் பிரியமுடன்
சாத்திப் பணிவதையும் தந்தைமிகு
சாக்கிர்தையுடன் றெரிந்து மனதுவந்து
அடக்கினா மாளாட்டா லறியா
வையனும் பிணிகொளுவா ரவதியென்றே. (தந்)

---

விருத்தம்.

பாலனை யழைத்துத் தாதை பயப்பட வார்த்தைகூறி
சீலமார் நதியில் மூழ்கித் தேவியைப் பூசைசெய்யும்
வேலையை விடுவாயென்று விளம்பியு மடித்துமவைதுஞ்
சாலவே யடக்கிநிற்குங் காலையில்த் தனையன்றானும்

காளிகோவிலிற் கண்டகாக்ஷி.

பூவுடன் பழமுந்தேங்காய் புகழுடன் றயார்கள்செய்து
தேவியின் கோவிலெய்தித் தீபமும் திகழவைத்து
ஆவியை நிகர்த்ததேவிக் கபிஷேக மனைத்தும்செய்யக்
கோவிலிற் சிறுவன்கண்ட கோலமார் காட்சிகேளீர். 1

பத்தரை மாற்றுத்தங்கம் போலவே பளபளப்பாய்ச்
சித்திரத் துடனேர்சின்ன வெலியுருவாகவந்து
பத்தியா யுடைத்ததேங்காய் பழமுத லானசர்வ
வத்துவ முண்டுநின்ற வளத்தினை யுளத்திற்கண்டார் 2

எலியுரு வாகவந்திவ் வீசியு மாலயத்திற்
பொலியுற வைத்ததெல்லாம் புசித்ததைப் புகழ்ந்துநோக்கி
மலிவருள் காளித்தாயின் மகத்துவ மென்னத்தேர்ந்து
நலிவணு வேணுமின்றி நாதனும் வளரும்நாளில் 3

பள்ளியி லனுப்பிச்சின்னாள் படித்தனன் படிப்பைவிட்டுப்
பிள்ளைக ளுடனேயாடிப் பிறிந்திடா திருந்தபின்னர்
உள்ளமே மகிழ்ந்துகாட்டி லூக்கமாய் வேலைபார்க்க
வள்ளலுஞ் சென்றார்தூய வயதொரு பனிரெண்டம்மா 4

காப்பியுங் கேப்பைவாழைக் காட்டையுங் காவல்காத்துக்
கோப்புடன் வெட்டுக்கொத்துக் குறைவறக் கவனமாகத்
தாப்புடன் செய்துபெற்றோர் தவிப்பரத் தாங்கவன்னாள்
கூப்பிட வில்லமெய்தா திருந்துதன் காட்டில்வைகி 5

## தக்ஷன் காட்டில் நடந்த காக்ஷி,

இருந்திடுங் காலமத்தி லிவருக்கு முணவதாகத்
திருந்திடு மரிசிமாவுஞ் சிறப்புட னனுப்பவந்த
பொருந்திய உணவுச்சாமான் பொட்டளம் வைத்ததாவி
லிருந்திடக் காணுதென்னே யென்றெணி யினிதுபூண்டே 6

கள்ளருங் காணார்வேறே களவுசெய் கயவரில்லை
புள்ளினம் புசியாமற்றை புனத்துளை மாக்களெய்தா
வுள்ளதிங் கெல்லாமிங்கே யொளிந்திலை யோகோவீது
வள்ளலின் செயலென்றெண்ணி மயங்கிடா தருந்துவண்ணம் 7

கதலியின் காயைவெட்டிக் கனலினிற் சுட்டுப்பிட்டு
யெதிரினி னிலங்குசெந்தே னெடுத்தினி திட்டுச்சேர்த்துப்
பதமுடன் புசித்துமூன்று பகல்கழித் திட்டபின்ன
ரதமதாய்ப் போனமாவு மரிசியின் மூடைகண்டார் 8

கண்டன ரிதுவுமென்ன காரண மிறைவன்சீரோ
மண்டலத் தெம்மையீசன் மனதளக் கின்றூரோவீ
தண்டரின் முதல்வனுன வய்யனு ராடலென்றே
கொண்டன ரதனையார்க்குங் கொடுத்தனன் குமரனம்மா 9

வாலிப வயதுந்தேக வடிவமுந் தேசுந்துய்ய
பாலிருந் தொழுகுகின்ற பான்மதி வதனச்சீருங்
கோலமு மழகுங்குன்றுக் குணங்களுங் குறியும்பாரா
தேலவே மணமுடிக்க வெண்ணினு ரிருபதாண்டில் 10

தந்தையு மகனைநோக்கித் தம்பிநீ தனித்துவைகில்
நிந்தைகள் வந்துசேரா நெறியொரு மாதைவேட்டுஞ்
சுந்தரா வென்னத்தந்தை சொன்னவை விசம்போலேற்றுச்
சிந்தையிற் கலக்கமுற்றுச் சினந்தென தய்யகேண்மோ 11

தாரமும் வேண்டேம்நீயுந் தாயமா யுரியவென்றன்
பாரதைப் பகுந்தீயென்னப் பலமதாய் வழக்குவாதஞ்
சோர்விலா தியற்றித்தாதை சொற்றவை தடுத்துப்பாகந்
தீரமா யேற்றுவேலை செய்துவந் திருக்குங்காலம் 12

இச்சக வாழ்க்கைநில்லா தியாக்கையு மினிதுசெய்யா
முச்சக மணைத்துந்தானுப் மூளைத்தெழு மொருவன்பாத
பச்சமே நமக்கும்மேலாம் பலன்றரும் பாக்யமென்றே
தச்சன்கா டென்னுமொற்றைக் காட்டினிற் றங்கிநின்றூர் 13

## ஈசன் தரிசன மீய்ந்தது.

காவலா யிருக்கும்போது கன்மசென் மங்கணீங்கு
மாவலா லகத்தில்ஞான வருட்பொலி யய்யன்முன்னே
கோவல னாகிக்குன்ற மெடுத்தருட் குழல்வாயாயன்
மாவல சித்தன்போலிம் மகவுமுன் வந்துதோன்றி 14

வெல்லுறு மாய்கையுன்னை வென்றிடா தினிநீயெந்தன்
செல்லமார் சிஷ்யன்முன்னே செய்பவங் கடப்பான்பூவில்
நல்லன புரிவான்வந்த ஞானிநீ நாதன்நானால்
பல்லியல் புற்றஞானப் பாங்கடை பாலவென்றும் 15

வழிகளும் மறையுங்கூறி மவுனநீ யாகியிந்த
வழியினில் வயங்குதூய மாதவக் கன்யநாதர் [ன்ன
மொழிமுறைப் படியிங்கெல்லாம் முதன்மையாய் நடத்துகெ-
வெழிலியின் வண்ணானை வீசனு முளத்திலானார் 16

அத்திரு நாதர்சொன்ன வறிகுறி யகத்திலாக்கி
வித்தக ஞானங்கொண்டு விகசித மவுனியாகிக்
கத்தனுங் கன்யநாதர் கருணையாற் சிஷ்யனாகிப்
பத்தரை மாற்றுத்தங்கம் பளிங்கொளி பரப்பிவாழ்நாள் 17

## கும்மி.

### தச்சன் காட்டிலிருந்த குமாரனைக் காணாது தாய் தந்தையர் தேடுதல்.

கந்தசாமிமன்னன் காட்டினிற் காவல்செய்
 கன்னி வாடியாள் மகள்மகனை
சொந்தமுடன் காட்டில் காணாமலேங்கியே
 சுற்றத்தார் தேடிய சீருரைப்பேன் 1

தச்சனூர் காட்டினிற் காவலிருந்திட்ட
சாமியைக்காணும லன்னை தந்தைக்
கிச்சையுளபால னெங்குசென்றுனென
வெல்லைக்கோ ராளாகத்தேடினரே 2

காப்பிச்செடியடிக் கோராளாம் வாழைக்
காயின்மரத்தடிக் கோராளாங்
கோப்பானகானகக் கும்மல்வரையெலாங்
கொந்துகொந்தாகவுந் தேடலுற்றார் 3

காளியின்கோவிலுங் கண்டார்கள் வீரக்
கருப்பன் கோவிலும்பார்த்தார்கள்
யாளிகள்வாழு மடவியுங்கானலு
மானுக்கோர் மூலைமூலைய லுற்றார் 4

தேடியலைந்து திகைத்து மயங்கியே
தெய்வமேயென்று தியங்கியய்யோ
ஓடித்தானெங்கேயும் போனானோ ஓங்கோ
ஒடைவரையிலுருண்டானோ 5

பண்டாரமாண்டியிப் பாதைவரக்கண்டு
பாசமுடனேபின் பற்றினனோ
வண்டாடுஞ்சோலை வளஞ்சேர்பழநிவாழ்
மாவடிவேலன்பாற் சென்றானோ 6

சிங்கங்கரடி சிறுபுலி வேங்கையுந்
தின்றுகொழுத்துச் செமித்ததுவோ
தங்கொளிஞானந் தனும்பித்தவசியாய்த்
தக்கதவஞ்செய்யப் சென்றானோ 7

வாழைக்காய்வெட்ட வகையறியாதானிவ்
வேலைக்காளாக விரும்புவனோ
வேழமதங்கொண்டு விரகத்தினாலேதான்
வேட்டுவமாதர்பால் மேவினனோ 8

பங்கைப்பகுந்திவண் வேலைசெய்திட்டவன்
பண்டாரமாகவு மாட்டானே
தங்கம்போல்மேனி தயங்கக்கண்டுதேவ
னைதயலர் தூக்கிநடந்தாரோ 9

பேய்களிழுத்துப் புடவுக்குளேவைத்துப்
பொசித்து வயிற்றை நிறப்பியதோ
ஆயகலைகளு மாய்தவனில்லையே
யார்செய்தபாவமோ யென்றழுதார் 10

பெத்தார்மனது பிரலபிக்கச்சுற்றிப்
பிறந்தார்மனதும் பிரமைகொள்ள
சித்தங்கலங்கியே தேடித்திரிந்திட்ட
சின்னாட்கழிந்தது தேன்மொழியே 11

விருத்தம்.

தேடினார் தேடித்தேடித் தியங்கினார் திகைத்துப்பன்னா
டோடினா ருழன்றாரோகோ யுமையரு ளிதுவோவென்றார்
கூடினார் கூடிக்கூடிக் கூக்குரலிட் டார்துக்க
மாடினா ராடியய்ய வம்மவென் றரற்றுங்காலை 1

அரகரா சிவனேயென்றவ் வடவிக டோருந்தேடி
யரிவிரி மலையில்வேத மறிந்தவ ரனேகர்ஞானந்.
தெரிவரும் பெரியோருண்டுந் தெரிந்திடார் வழிகட்கென்றே
பரிவுடன் மலைகானங்கள் பலதிலும் பார்த்துக்காணார் 2

இவ்வித மிவர்கள்வைக வீசனு ரருளையுற்ற
செவ்விய ஞானசீலத் திலகராங் கன்யநாதன்
ரோவ்வியே யுரைத்தஞான முளத்திடை யோங்கிநிக
மவ்விவ மின்றிக்கண்டா ராத்தும ஞானம்பூண்டார் 3

## ஸ்ரீ மவுனதேசிகரைக் கண்டது கூறல்.

### கும்மி.

—(o)—

ஆனந்தமானந்த மானந்தமானந்த
மானந்தமானந்த மானந்தமே
ஞானந்தங்கிய ஞானியராடலை
நானுந்தமிழில் நவிலுவனே 1

கன்னியநாதர் கருணையினால் வேதக்
காரண மான கடவுளினை
மன்னுமருள்விதி மார்க்க முறையினிற்
மா மவுனத்தின் வழி யுணர்ந்தார். 2

ராஜாங்க யோக நிலையுணர்ந்தார் பூமி
ஆசாபா சங்க டணைத் துரந்தார்
வாசா மகோசர மாக மனநிலை
மார்க்கமுந் தீர்க்க முடனறிந்தார் 3

அட்டமா சித்திக டானறிந்தார் தேவ
ராரணஞானத் தரு ளிறைந்தார்
திட்டமா ஞானத் திரமறிந்தார் யோக
மிட்ட முடனே யினி துணர்ந்தார். 4

தூர நிலையுந் தொழி லுணர்ந்தார் தூய
துரியாதீதத் துரையுணர்ந்தார்
ஆறாதாரப் பகுப்பை யறிந்தனர்
ஆனந்தமோன நிலையறிந்தார் 5

பேசா வெழுத்தாம் பெரியெழுத்து மிக்க
பேரின்ப ஞானப் பிறப்புணர்ந்தார்
மாசான நீதி யதையறிந்தார் ஞான
மார்க்க நிலையும் மனத்தறிந்தார். 6

அந்தக்கரணக் கருவியவாவுட
னைபலவு மகத்துணர்ந்தார்
சிந்தான காமாதி யாகிய துஷ்டரைச்
சிக்கென வெட்டித் திகழ்ந்துநின்றார். 7

மும்மலமாகிய மூர்க்கக் கடாக்களை
மூர்க்க மடங்க முறை தெரிந்தார்
ஐம்புலச் சீருமள வறிந்தார் ஞான
வாழி படிந்து மகமகிழ்ந்தார். 8

வானிலுடுவின் வடிவறிந்தார் தூய
மாமதிபானுள் வடிவுணர்ந்தார்
கோனினருளுங் குணமறிந்தார் ஞானக்
குன்றிலமர்ந்துங் குளிர்ந்திருந்தார். 9

வாதிகள் சீரும் வழிதெரிந்தார் ஞான
வான்கள் குறியு மிகப்புனைந்தார்
சோதிமயமாய்த் துலங்கி யருணிலை
சுந்தரமாகச் சொலித்து நின்றார். 10

## விருத்தம்.

முக்கால ஞானியாரின் முயர்ச்சியால் ஞானமுற்றுப்
பக்குவியாகி மோனப் பதத்துடனிருக்குங்காலம்
மிக்கமெய்ஞ் ஞானச்சீர்த்தி விளங்கிட வுலகினுள்ளே
தக்கதோர் வழியினின்ற தகமையைச் சாற்றுவாமே.

## சிந்து

தங்கத்தினெழிலு மிகுத்தார் தவசியர்
தகமை மகிமையுடன் றனித்து நின்றார்
மங்களமிகுத்த மவுனி வனத்தினிடை
வந்துலவிப் போவதனை வழியிற்கண்ட
செட்டிமைக் குலத்தின் முதியோர் சிற்சிலர்
திகழுந் தவசியரைச் சேவைசெய்தார்
இன்னாரிவரெனவு மிவர்திரு
விசையுந் தவத்துருவு மினிதுவந்து
ஊரினிடை வந்து புகல ஊரல்பட்டி
யுள்ளவர்கள் நல்லதென வுளமகிழ்ந்தார்
மாமவுன தேசிகர் வாழும் வான்கிரி
வந்தழைத்துச் சொந்தமுடன் வணங்கிநின்றார்
பாலுடன் பழங்கள் வழங்கிப் பணிவுடன்
பரிவுசொலிப் பணிந்து பத்தரெல்லாங்
கெண்டாடிக் கொண்டு வருநாள் கோலமுனி
கோப்புடனியற்றிநின்ற கூற்றினைச் சொல்வாம்.

## சித்து விளையாடியது.

இங்கேயொரு வீட்டிலிருந்தே பால்பழ
மினிதுற வுண்டிடுவா ரின்னமடுத்த
வீட்டிலு மிருந்திடுவார் வினையமுற்ற
மேவந்தருக்கல்லாமலதை விளக்குவதோ
வீட்டிலொரு மூலையிற் மூடி மிக்க
வெங்கலப் பூட்டிட்டதனைத் தாளுமிட்டு
சுத்திநிறைந் தாட்களிருக்க தூயவனுந்
தெருவி லுலாவிவந்து திண்ணையமர்வார்
விரலளவொரு கயற்றை வீட்டு
முகட்டுவரைக்குமிட்டு துவளவிட்டுத்
தாட்டிகமதாயமர்ந்து சாமியிவர்
சயனித்திருந்த கதை சாற்றவெளிதோ
இல்லமே பாற்கடலா மதி
யிலங்குங் கயிறுமொரு பாம்பணையாம்
சுந்தர மதிவதனத் தேசசும்
சோடசக்கலையினது சுடர் விரிக்குந்
தங்கத்தினொளிநிகராய்ச் சரீரந்
தங்கியொளிக்கின்ற கதிர் சாற்றவரிதோ
அன்றவரிருந்தவித மதனையா
மறையவென்றுலரி சயனமதாம்
எங்கேயினுங் காணுமென நின்றொருவன்
எண்ணியபடிக்குவந்தங் கெதிராவார்
தன்னையொரு மனிதனின்று வையுந்
தகமைதனையு முளந் தனிலறிவார்

சிறிய மதலை யெனவே பார்த்தோர்
செப்பிடும்படிக்கி விளையாடி யிருப்பார் (தந்)

தூய்யவெள்ளைச் சோமனிடையில்த் தோளிற்
துலங்குந்தவாங்கமொன்று சூடியிருப்பார்

ஊறற்பதிதனக்கங் கடுத்த
மொன்னரை நாளிகைவழியுபரத்தினில்

பத்தர்கள் பணிந்திலங்குஞ் சிறு
பன்னகசாலையிற் சற்று பதிவிருப்பார்

நித்திரை புறிந்தறியார் யோக
நிஷ்டையோகத்தை நிலையுற்றுமுடிப்பார்

அவர்நடமாடுகின்ற வருவிக
ளாருமறிவதர்க் கங்கமையாது

இராப் பக லெப்பொழுதும் ஒன்று
யினிய கிரிப்பதியி லுலவிடுவார்

இப்படியிருக்கு மமையம் இவருடையு
மிடத்திற்கடுத்தவொரு மலைநாடாம்

தாண்டிக்குடியில் வசிக்கும் மண்ணடி
மார்கள் முடித்த கரிமாலவரின்

ஆலயமொன்றுளதே யுதன்கதவை
யடைத்த தினத்தளவை யறியவொண்ணு

மூடிய வக்கதவைத் திறந்துபூசை
முதலியதைப் புரியப் பார்த்ததில்லை

அத்திருவாலயத்திற் கிவருமங்
கடைந்திருந்த தினத்தில்[illegible]தமாயு

அவனுறை பெரியோர்க ளிந்த
வாலயத்தினைத்திறக்க வாவலுற்ற
கருத்தை மவுனி தெறிந்தே பூட்டிய
கதவைக் கரத்திலிவர்தொடத் திறந்த
தத்ததியுள்நோக்குகையி லழகிய
தான திருப்பேழையினை மவுனிகண்ணால்
கண்டதின் காக்ஷியுடன் கரியமால்
காமாக்ஷியம்மனது கருணையினால்
பூண்டிருந்த பட்டதனை புது முனிவர்
புகழ்பெற்ற வாலயத்தின் புதுமையுடன்
கட்டியொரு பொட்டளமாக கிரியமால்
கடவுளிருக்குமிடங் கட்டியும்விட்டு
முன்னே சிறுவயதில் காளிகோவில்
முதன்மைத் தெரிசனஞ்செய் யெலியதுவு
மங்கை வரமகிழ்ந்தே யம்மன்
அருளை யெலியெழிலை யகம்பதித்து
கதவினை யடைத்துவிட்டார் இதன்
காலங்கள் பின்னாகுமெனக் கழறிவிட்டு
தெற்கே சுருளிமலை முதலிய
திருக்கிரி க்ஷேத்திரத்தின் நிரமுணர்ந்து
குமாந்தாபுரியில் வளர் குணமணி
கோமான் மவுனகுரு கூடமுமுற்று
அங்கே யிருந்த பின்னர் இதை
ஆக்கிய நூலாசிரியனென்னை

கண்டே சில புகன்று தன்னுடைய
காரணக்கதைகள் பல வாரணப்படி
சாக்ஷிய மதாயியம்பி தனையன்
தழைக்கும்படிக்குத் தெரிசனமருளி
வந்தோர் கிரிபுகுந்தே தான்வசிக்கும்
மாநகரி லாச்சிர மாக்கிடவெண்ணி (தந்)

## ஆச்சிரமக்காக்ஷி.

முன்னவர்பேண்நாவலசத்தில் மவுனியர்
முக்கிய மடமியற்ற முயற்சிசெய்து
தன்னகரில்லாதவைந்து தலைவரைத்
தக்க மானேஜரெனத் தானிறுவி
பத்தர்குழாம் நத்திவறவும் நாவலசில்
சித்துகள் நடத்தியதைச் செப்பவரிதே
பாலாற் காவடிகள் பத்தர்கள்
பரிந்து எடுத்துவரப் பரந்தாமன்
அருளார் நாவலசி லன்பர்குழாம்
அழகார் காவடிகளிலிட்டவமுது
காற்படியானாலும் கனதவன்
காட்சியாலொருநதிபோற் பொங்கிவழியும்
மவுனிதன் மடமதனைப் பெரிய
மார்க்கமுற்ற மடமாகக் கட்டிடவெண்ணி
மானேச ரைவருடன் மவுனியார்
மடங்கட்டிட வுரைக்க மாணவர்களும்

இவர்க்கேன் மடமெனவே இடையினி
விழிவுகள் சொல்லியைவர் விலகிவிட்டார் (தந்)

மவுனியார் ஆச்சிர்மங்கட்டி முடித்ததைக் கூறல் விருத்தம்.

பந்துக்களான பக்தர் பரிவுடன் மவுனிக்காகச்
சுந்தரமடத்தைக்கட்டத் தொடங்குநாள்பொறாமைகொண்டு
நிந்தைகள் பலவாய்ச் சொற்றி நின்றிட மவுனிபார்த்துச்
சிந்தையினருளாற்செய்து திகழ்மடச் சிறப்பைக்கூர்வாம்.

கும்மி.

கையிலோர் காசுங்கிடையாது சாமி
காணிக்கை கப்பமேதோது
மெய்மைப் பொருளாய் விளைத்த மவுனியார்
விந்தையைக் கேளடி வித்தகியே. 1

சுத்திநிலங்களுந் தர்க்காஸ்து அதைச்
சூழ்ந்த நிலஞ்சில கைக்காசு
நித்தியமான ரிஷிமடமானதும்
நிலையாயிருந்திட நிச்சயித்து 2

தோட்டமடமுந் துலக்கவெண்ணித் தன்னைச்
சூழ்ந்தசிஷியர் திரமுமெண்ணி
அட்டமாசித்தியா லிம்மடங் கட்டினு
லாடம்பரம் வெளியாகாது 3

என்று மனதிலிவர்நினைத்து மிசை
யெங்கும்பரவ யுளம்பதித்து
அன்றுமுதற்றெட்ட வேலை முடித்திட
ஆனந்தங்கொண்டா ரறிவுடையார் 4

நாட்டு விசுவனைத் தானழைத்துச் சில
நாணயமீய்ந்து நலங்கூறி
தாட்டிகமாய்வேலை தான்செய்யும்வேளையில்த்
தச்சனிடஞ்சலைக் கேளுங்கடி 5

அந்தோயிவரொரு ஆண்டியிவருக்கிங்
காருஞ்சகாயங்கிடையாது
இந்தச் சமயத்திவரை மிரட்டலா
மென்று நினைத்தான் விசுவகர்மன். 6

ஒரு ராத்திரியில் 10 வண்டி மணல் வந்து சேர்ந்தது
கூறல்.

செந்தரை மட்டுங் கல் கட்டியாச்சுதினி
செம்மலே பத்துவண்டிமணலும்
வந்தால் வருவோமே வேலைசெய்யவென
வம்பில் விசுவன் வழக்குறைத்தான் 7

நல்லது நல்லதென மவுனியிவன்
நவின்றமொழிக்குச் சரிகொடுத்தே
அல்லிலடுத்த சிறுந்திசென்றவ
ரள்ளிதலையில் மணற்சுமந்தார். 8

பத்தொருதட்டு மணல்சுமந்தே யிவர்
பரிவாய் வருகையிலே யிவர்க்குச்
சித்த தியானந்திகம்பிரமாகவே
செய்தாரொரு சாம நிஷ்டையதே 9

நிஷ்டையிருந்து நிசிகழியமணல்
நிறையக்குவிந்து நிறம்பிட்டே

இஷ்டருளத்திலிலங்குங் கடவுளா
மீசன் செயலிதுமாமெனவே 10

வந்துவிசுவனைத் தானழைக்க யவன்
வம்பாய்ப் பணம் நூறு ரூபாய்நீ
தந்தால் வருவோமென வுரைத்துத் துணி
தன்னைக் கழுத்திலிட் டேயிழுக்க 11

சுந்தரமான மவுனியினுள்ளந்
துலங்குமிறைவனருட் பலத்தால்
வந்தொரு மாமன் வலிய துகையினைத்
தந்தனர் பின்னாலிம் மாமவுனி 12

வந்துவிசுவனை வைது மணலிதோ
வந்துகிடக்குது வாருமென
அந்தவிசுவ னகத்திற் பயந்துமே
யய்யன் மவுனிசொற் போநடந்தான் 13

---

(சுவாமி தற்சொரூபத்தை சிலையியற்றிய விருத்தம்.)

கனதவத்தில் மிகுகுணத்துக் கண்யரான
கன்யநாதப்பரமன் கருணையாலே
மனமகிழ்வு மிகுசுகுண மவுனஞான
மாதவனு மனதுலவு வாஞ்சைபோல
தினகரனு மதிபுவியுந் திகழ்நாளீறுந்
செய்யபுக ழீட்டிடுவான் கீர்த்தியாக
மனகமிகு மதிவலரும் வாழ்த்துவண்ணம்
மனுரூபமாய்த் தனது வடிவம்போல 1

கருஞ்சிலேயாற் சிற்பியுளங் கருதிச்செய்யக்
கனதவத்தின் மிகுமவுனி ரூபமேய
விரும்புவியி லயனமைத்த வெழிலேப்போல
விறையோக தவசியுரு வதனை கன்கு
பெருங்குணத்தார் பேசிடுவான் பிறங்குதுய்ய
பிர்மரிஷி யிவரெனவே புகழ விஸ்வ
ஞெருங்கிலகு சிலேயுருவி னுசித வேலே
யுற்பனஞ்செய் தான்குருவி னுதவியாலே 2

ண்டாலும் பிணிதுயரங் கவலேயெல்லாங்
கனலிலிடு துரும்பதெனக் கருகிவாடுங்
தொண்டாகத் தொழுதாலுங் துதித்திட்டாலுங்
தூயவெண்ணப்பலன்களெல்லாஞ் சூழ்ந்துகூடும்
பண்டான மறைகளெல்லாம் படித்துணர்ந்த
பதமுடையார் பணிந்துதொழும்பாண்மைவாய்ந்திம்
மண்டலமெல்லாம் வணங்கி வாழ்த்திப்போற்றும்
வளங்களுங்கொண் டோங்கியதிவ் வள்ளல்ரூபம் 3

சொன்னபலன் நடத்துவிக்குந் தோன்றல்ரூபஞ்
சுருதிவழியாக்ஷி செய்யுஞ் சுகுணர்க்கெல்லாம்
நன்னலமே நாட்டுவிக்கும் நலமுண்டாக்கும்
ஞானதெரிசனப் பழக்கம் நாட்குநாளாய்ப்
பின்னமிலா தோங்கிநிற்கும் பிணக்கொன்றில்லாப்
பெருமிக்க புகழ்விளக்கும் பிறங்கும்மேலோர்
தன்னருளு முண்டாக்குங் கன்யநாதச்
சற்குருவி னுஞ்ஞைமிகுஞ் சாதுரூபம் 4

தினந்தோருந் தீனபந்தே திகழுமன்பர்
திருப்பொருளே தெய்வீக சீலஞானு
மனதிரங்கிக் காருமென வந்துபோற்றும்
மக்களுளப் படிக்கிணங்கி மகிழ்ந்துகாக்குந்
தினகரமெய்ஞ் ஞானியர்தம் மாலயத்தைத்
திரிகரண சுத்தியொடு சேவித்தய்யன்
றனதுசிரு வடிமலர்க்குச் சாஸ்த்ரமாற்றஞ்
சதாதொழுது சகலருநற் செல்வமுற்றார்.

அருங்கானலென்னு மருளானந்தகிரியின் மகிமை.

விருத்தம்.

சீருலாவித் திகளுந் தெளிமறை
யோருலாவி யுறைந்து முபர்தவப்
பேருலாவிப் பிறங்கும் பிரபலத்
தோருலாவி யுபருங் கானலே

அண்டர்தேவ ருந்தவ ராகிய
தொண்டர்வந்து தொகுத்த தவத்தினைக்
கண்டுமூவர் களித்து வரந்தருங்
கொண்டல் சூழ்ந்து குலாவருங் கானலே 2

ஞானகத்தர் நலத்துடன் வாழ்வுறுங்
தானமுக்ய தவத்தினுக் கானதே
வானகத்தர்கள் வந்து படிந்திடு
வானகங்கை வயங்கருங் கானலே.

யாகமெக்ய மடர்ந்து நெருங்கிய
பாகபக்குவப் பாக்கியர் வாழ்வுறும்

யோகபூமிக் குயர்ந்து விளங்கிய
வாகமங்க ணிறையருங்கானலே.

இந்திராதி யிமைய ரேத்திடு
மந்திராசலம் மானு வளத்தினைச்
சிந்திடாத சிறப்புட் டிகழ்ந்துள
வந்தமர்ந்த வருளருங் கானலே.

தேவலோகத் தெருண்மிகு சீலர்க
ளாவலாக வருந்திட வெக்யமே
கூவியீயுங் குளிரவிர்ப் பாகமே
நாவிலார வுணுமருங் கானலே

கொங்கு புன்னைக் கொடியிலுமிச்சையுந்
தங்குதெங்கு தருத் தேவதாரமே
யங்கி போற்றுளிரார்த்த வகில்பிலா
வெங்குமோங்கி யிலங்கருங் கானலே

வான்றொடு கமுகாரலும் மாமுதல்த்
தேன்படும் பனையுஞ் செறிநாங்கிலுங்
கான் படுங்கொடி முல்லையசோகமுந்
தான்படிந்திடு தண்ணருங் கானலே.

(வேறு சந்தம் விருத்தம்.)

பொன்னகரத் துறையமரர் வந்து சூழ்ந்து
பூரணன்றமொடு பொலியக்கூடி

தன்னிகரில்லாப் பரம னுடல்தன்னைத்
        தன்னுள்ளே பாடியுளந் தயங்குஞானம்
மன்னிவளர் சாலைகளில் வசந்தகால
        வெளிதேடி வந்துவந்து வயங்குகோல
மென்னிலத்துமில்லையெனு மிசையுற்றோங்கி
        யிலங்கி வளங்குலவுமருங் கானலம்மா. 1

தந்திவராகத்தின் மருப்பொடிந்துவீழ்ந்த
        தண்டரள மணியொளிவுஞ் சாலிசோலை
சிந்துகின்ற மணியொளிவும் நண்டுசிப்பி
        திகழநின்ற செம்மணியுஞ் சிலவேலைச்
சந்திரனு முடும்பரவுந் தந்த ரட்ணத்
        தண்ணொளியும் நீங்காது தயங்கிக்காலை
யந்தியிர வெனத்தெரியாச் சோதியார்த்து
        மவிரொளி நீங்காதவருங் கானலம்மா

மூலாதாரத்துடனே விளம்புகின்ற
        முதலான வோங்கார முறையும் ஞான
மேலான கலையிரண்டும் வேதபோத
        விளக்கானரேசகபூரககும்பத்தின்
மாலான மவுனியர்கள் வயங்கிவாழும்
        மணிமந்த்ர மறைமொழியும் மாராதோங்குஞ்
சீலநலச் சீர்நிறைந்து திகழாநின்ற
        தெய்வீக மிகுத்தவருங் கானலம்மா 3

தெய்வவளந் திருஞானஞ் செறிந்தசித்தர்
        திடமாக வந்தணுகி வாழ்வதன்றி

வையமிசை ஞானமிலா ரதனிற்புக்கி
　　வருவதுங் கண்டவர்களிலே வானுளோங்கு
மைந்தருவுந் தேனுநிகர் பூக்களாக்க
　　ளளியமுத மருந்தியுள மதனினீங்காத்
துய்யவரு ளானந்த மிகுத்தஞானச்
　　சுகுணர்வளர்ந் தோங்குமருங் கானலம்மா 4

எண்ணரிய கனதவத்தற் கிசைந்தகானத்
　　திலங்கமரார் முனிவர்குழா மேத்தவாழும்
பண்ணரிய வேதாந்த மவுனிவாழும்
　　பாங்கதனைப் பகரவெளி தாமோவிந்த
வண்ணமுள்ள கானகத்தில் வயங்குஞ்சீல
　　வானவர் நேராந்தவத்தின் மகிமைவாய்ந்த
கண்யநாதப் பரமன் கருணைநீங்காக்
　　கன்நிறைந்த பொற்றருசூழ் கானலம்மா 5

## நாகேந்திரன் புகழ்.

இப்பெரு மிசைகொள்கானி லிருந்தருள் கண்டநாதத்
தற்பரன் மகிமையாலே தவமணி மவுனியாகிப்
பொற்புற விலங்குங்காலம் புனிதமார் கருணைவள்ளல்
சொற்பெரு மருளால்நாகந் துணைபுரிவளஞ் சொல்வோமால்.

## சிந்து.

நற்றவ மணியவர்கள் ஞானமிகு
　　நற்பய னதனை யொழில் நாகமுங்கண்டு
சொற்சுவை குணமயராத் தூயகுணச்
　　சுந்தர மவுனகுரு சுவாமியவர்கள்

பெருமித வருமைதனைக் கண்யகுருப்
போதகரிடத்தறிந்த போதனையினால்
நாட்குநா ளோங்கு நலமும் நவமணி
நல்லொளி பிறங்குகின்ற நாதனுயர்வாம்
நிஷ்டையோ கத்திலிருக்க நீடுதவ
நிலைபெற்ற நாகமுமெய் யறிவுடனே
அண்டையில் வந்தணுகி தனதுளத்
தருமை பாராட்டியதை யறைகுவமே (தங்)

மண்டலமதாக வளைந்து மவுனகுரு
மாமலர்ப் பாதத்தைச்சுற்றி வணங்கி நிற்கும்
ஆதித்தன் கிரணமதா லனலிவ
ரங்கத்திற் படாதவணம் மறைத்துநிற்கும்
நீழலைப் பரப்புவதல்லால் நெடியவன்
நிமல யோகநிஷ்டையின் நிலைதவரா
வண்ணமருகாக வமரும் வான்படம்
வயங்க விரித்துகுடை யாகவிரிக்கும்
ஒருதிங்கள் ஒருவருடம் உயர்தவ
மோங்கிடு நிஷ்டையைக் காத்தங் குலவிநிற்கும் (தங்)

வண்ணமுள்ள கொடிப்பிரம்பில் மவுனியார்
வயங்கி நிஷ்டையிருக்கில் வளைந்துலவும்
உத்தம மவுனியிவ ருறைவிடத்
துசிதமுடனிருந்து முலவிநிற்கும்
நாகதாளி ரூபமுடனே நாவலசில்
நவையணுகாதபடி நாடொறுங்காக்கும்
தூயதவ நாதருகே நாகமதுஞ்

சுற்றிச் சுற்றிவளைந்து தொழுதுநிற்கும்
மாவளமிருத்த வரவம் மாமடம்
வயங்கப் புற்றரண்மனை வாழ்ந்திருக்கும் (தந்)
மவுனியின் பிறப்புடனே மாசற்ற
மகிமை நடத்திநின்ற வகைவிரித்தேன்
நாகரின் நலமுறைத்தேன் நாகநாளி
நாகம்போலுருவெடுத்து நாட்டியமதாய்
ஆடியும் வளைந்துகுலவு மானந்த
மானவருங்கானகத்தின் வளமுறைத்தேன்
கோமள மணியணிந்த கோகிலமே
கூறுவோம் நாவல்ரசக் கோலமதை (தந்)

சுந்தரமிகுத்த மவுனி சுயநகர்
சுத்தமும் பத்தமுமிகு சுகுணமுள்ளார்
கற்றவர்க் கிணங்கிடுவார் பொதுநலக்
காரணம்படைத்தகொடைக்கர்னனெனச்சொல்
கொன்னவாய் ராமசாமி அவர்தவக்
குமரனெனுஞ் சுகிர்தக் காயமனுந்
தீவிர மனத்துடனே மவுனியார்
சீருடனிருக்குவொருசித்திரமடம்
அழகார் திருக்கோவி லதர்க்கிசை
வாணமானிபமுட னுதரவும்
பார்பசுக் கன்றுபலவும் பரமனருள்
பாலக விநாயகரி னாலயமும்
நாகருக்காம்மனையும் செய்தபின்
நற்றிருமங்களமுற்ற நாவலரசாங்

தலத்தில்த் திருநாளுந் தக்கநல்ல
தன்மையும் பலபணிதி நன்மையுடனே
வருடா வருடமதில் வளமிகு
வைகாசி மாதமதில் வண்மையுறவே
நடத்துந் திருநாளின் நலத்தைப்பின்
நவிலுவோங் கேளடி ரத்தினமே

விருத்தம்.

பண்ணையிற் பரங்கிவந்த பரமனுக் குறியதான
வண்ணமார் விழாவின்மாந்தர் வணங்கியேவாழ்வானுன்னி
யெண்ணுதற் கொணுதசித்தையியற்றியு மிலங்குகீர்த்தி
நண்ணுவார் மன துவப்ப நாதனும்மவுனிக்காக

மலைவளர் மக்களெல்லா மாதவள் மகிமைநாளில்
நிலைமணி பசுப்பாற்கன்று நிதியொடுநிலவுவீசி
விலைமதியாத ரட்ன மேகலை யாமீட்ட
நலமிகு க்ஷேத்திரத்தில் நடாத்து கொண்டாட்டநன்றே

## நாவலசத்தின் மகிமை.

இந்தப் புண்யக்ஷேத்திரத்திற்கு சுமார் 2 நாளிகைவழி தூரத்தில் மகாதவசிரேஷ்டர்கள் தங்கிதவயோகநிஷ்டை முதலியது செய்யாநின்ற அநேக குகைகளுந் தேவ ரகசியம் பேசிடு விசித்ர ஸ்தலங்களுந், தேவர்கள் வந்து செறிந்திலங்கு கெம்பீர சபாமண்டபப் பாரைகளும் சதுரிக்கப்பட்டு வேலை செய்துள பற்பல இல்லங்களுங் குடிசைகளும் மிகுந்துள்ளன வதில் நாகதாளியென்ற செடியானது நாகம்போற் சீறு

வதும், கண்களி லக்கினிப்பொறிகள்போல் சிதறிச் செருமுவதும், பின்னர் நெளிந்து ஆடுவது முடனே மறைந்துவிடுவது மன்றியநேக சித்தர்கள் புற்றுப் புற்றாய் நின்று தவம்செய்து கொண்டிருக்கிறதும், இம் மவுனகுரு சுவாமிகளின் ஞானாசாரியார் ஆங்கு புன்னைமரத்தின் நிழலில் நிஷ்டைகொண்டிருக்கிறதும் நம்போல்பவர்கள்நவில்வதுமுடியாமையாம். ஆங்கு மகா தவ சிரேஷ்டர்கள் செல்லவும் வரவும் முடியும் இதில் சேகண்டியோசை இரண்டாம் சாமத்திலுண்டாகும். இதற்கு நேராக ஒரு பர்லாங்குக்கு நேர்பார்வையும் 3 மைல்தூரமுமுள்ளதுமான வரையில்ச் சங்கினுருவமிருக்கிறது. அந்த இடத்திலிருந்துசங்கின்முழக்கமுண்டாகிறதால் அந்தஓசையும்கேட்டு இஃது தேவர்களது திருவிளையாடலென்று கண்டு ஜனங்கள் பகவத்யானஞ் செய்வார்கள். அதற்குமேல் 'நாரம் பங்கிநதி" அதாவது தண்ணீர் பங்கியவிடம். அதில் பழனியாண்டவருக்கும்,காமாக்ஷியம்மாளுக்கும் தண்ணீர்வாதம்வந்து அதன் மூலமாய் பிறிக்கப்பட்டது. நீரோடையினின்று ஜலங்கொப்பளித்து சுமார் இரண்டடியுயர மெழும்பி வடசாயலாகப் பாதியும் தென்சாயலாகப் பாதியும் செல்லுவதில், வடபாகம் ருத்திராட்சத்துடன்செல்வதால் சண்முகநதியென்றும் தென்பாகம் உமை முகங்கழுவிய காரணத்தால் மஞ்சளாறென்றும் பெயருண்டாயினது. அரிவரிமலை,வால்சுருட்டிமலை,மாவலிமலை, மன்குலி, பொன்குலி, அக்காமலை, ஆலங்கணவாய், சங்குவரை முருகமலை, தோகைவரை மணிகட்டாங்தேரி மாயாஊத்துவில்பட்டி முதலிய மகிமை வாய்ந்த கிரிகள் ஒன்றுக்கொன்று ஒரு பர்லாங்கு தூரத்திலிருக்கிறது. இதன் விபரம் அடுத்த பதிப்பில் தெரிவிக்கிறோம்.

இஃது முதற்பதிப்பானதாலும் விஷயங்கள் ஒன்றையே பலவிடத்துங் கூறியுள்ளதாலும், இம்மவுனதேசிகரின் திருவாய்மொழி யருட்பிரசாதத்தாலாக்கிய வசனங்களை யச்சரார்த்தமாக நேரில் கேட்டதும் கண்டது கூறியுள்ளோம். இவரது பரிபூரணானந்தத் திருவிளையாடலை பலருமெளிதிலுணரும்படி நேரில் போய் பார்த்தானந்திக்கலாம்.

இதல்லா மிந்நூலை துந்துபிவரு மாசிமீ த்தில் நாவலசத்தில் நேரில் உரைத்தபடியே யெழுதினேன். பங்குனிமீ உத்திரத்தில் பழயாயக்குடியில் களவுபோன பலபுத்தகத்துடனிதுவும் போயின. பின் ருத்ரோத்காரிவரு மாசிமீ த்தில் இதுமட்டும் கிடைத்தன. அதன்மேல் ரக்தாக்ஷிவரு வைகாசிமீ த்தில் சுவாமிகளினுத்திரவா லனபர்கள் அச்சிடப்பட்டிருக்கிறது. காப்பி 250 தான். அடுத்தபதிப்பு கூடியசீக்கிரம் வெளிவரும்.

இந்நூலை தினந்தோறும் படித்தவர்க்கும், பிரத்யாருக்குப்போதித்தவர்க்கும், புகழ்ந்து கொண்டாடிடுவோர்க்கும், அச்சிடுவித்துலகமெலாம் பரவும்படி செய்தவர்க்கும், இந்நூலாசியர்க்கும், முயற்சித்தவர்க்கும், ஸ்ரீ மாமவுனதேசிகரது கிருபையால் தீர்க்காயுளும், செல்வமும் புத்திரபெற்றியும் இகபரசெல்வமும் கிடைக்கும். இஷ்டார்த்த சித்தியுமுண்டாகும். சுபம்.

தங்களன்புள்ள

ஆ. க. வே. கற்பூர திருவேங்கடஸ்வாமி.

முற்றிற்று.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
181925